ஸ்ரீமதே இராமாநுஜாய நம:

# பெரியாழ்வார் திருமொழி 2-3
## போய்ப்பாடு
(பன்னிருநாமம்: காதுகுத்துதல்)

139 * போய்ப்பாடுடைய நின் தந்தையும் தாழ்த்தான் * பொருதிறல் கஞ்சன் கடியன் *
காப்பாருமில்லை கடல்வண்ணா உன்னைத் * தனியே போய் எங்கும் திரிதி **
பேய்ப்பால் முலையுண்ட பித்தனே * கேசவ நம்பீ உன்னைக் காது குத்த *
ஆய்ப்பாலர் பெண்டுகள் எல்லாரும் வந்தார் * அடைக்காய் திருத்தி நான் வைத்தேன் (1)

140 வண்ணப் பவளம் மருங்கினில் சாத்தி * மலர்ப்பாதக் கிங்கிணி ஆர்ப்ப *
நண்ணித் தொழுமவர் சிந்தை பிரியாத * நாராயணா இங்கே வாராய் **
எண்ணற்கரிய பிரானே * திரியை எரியாமே காதுக்கிடுவன் *
கண்ணுக்கு னன்றும் அழகுடைய * கனகக் கடிப்பும் இவையா (2)

141 வையம் எல்லாம் பெறும்வார்கடல் வாழும் * மகரக்குழை கொண்டு வைத்தேன் *
வெய்யவே காதில் திரியை இடுவன் * நீ வேண்டியதெல்லாம் தருவன் **
உய்ய இவ்வாயர் குலத்தினில் தோன்றிய * ஒண்சுடர் ஆயர் கொழுந்தே *
மையன்மை செய்து இளவாய்ச்சியர் உள்ளத்து * மாதவனே இங்கே வாராய் (3)

142 வணநன்றுடைய வயிரக் கடிப்பிட்டு * வார்காது தாழப் பெருக்கி *
குணநன்றுடையர் இக்கோபால பிள்ளைகள் * கோவிந்தா நீ சொல்லுக் கொள்ளாய் **
இணைநன்றழகிய இக்கடிப்பு இட்டால் * இனிய பலாப்பழம் தந்து *
சுணநன்றணி முலையுண்ணத் தருவன் நான் * சோத்தம்பிரான் இங்கே வாராய் (4)

143 சோத்தம்பிரான் என்று இரந்தாலும் கொள்ளாய் * சுரிகுழலாரொடு நீ போய் *

கோத்துக் குரவை பிணைந்து இங்கு வந்தால் * குணம்
கொண்டிடுவனோ நம்பீ **
பேர்த்தும் பெரியன அப்பம் தருவன் * பிரானே
திரியிடவொட்டில் *
வேய்த்தடந்தோளார் விரும்பு கருங்குழல் * விட்டுவே நீ
இங்கே வாராய் (5)

144 விண்ணெல்லாம் கேட்க அழுதிட்டாய் * உன் வாயில்
விரும்பியதனை நான் நோக்கி *
மண்ணெல்லாம் கண்டு என் மனத்துள்ளே அஞ்சி * மதுசூதனே
என்றறிந்தேன் **
புண்ணேதுமில்லை உன் காதுமறியும் * பொறுத்து இறைப்போது
இரு நம்பீ *
கண்ணா என் கார்முகிலே கடல்வண்ணா * காவலனே
முலையுணாயே (6)

145 முலையேதும் வேண்டேன் என்றோடி * நின் காதில் கடிப்பைப்
பறித்தெறிந்திட்டு *
மலையை எடுத்து மகிழ்ந்து கல்மாரி காத்துப் * பசு நிரை
மேய்த்தாய் **
சிலையொன்று இறுத்தாய் திரிவிக்கிரமா * திருவாயர்பாடிப்
பிரானே *
தலைநிலாப்போதே உன் காதைப் பெருக்காதே * விட்டிட்டேன்
குற்றமேயன்றே (7)

146 என் குற்றமேயென்று சொல்லவும் வேண்டாகாண் * என்னை நான்
மண்ணுண்டேனாக *
அன்புற்று நோக்கி அடித்தும் பிடித்தும் * அனைவர்க்கும்
காட்டிற்றிலையே **
வன்புற்றரவின் பகைக் கொடி * வாமன நம்பீ உன் காதுகள்
தூரும் *
துன்புற்றனவெல்லாம் தீர்ப்பாய் பிரானே * திரியிட்டுச் சொல்லுகேன்
மெய்யே (8)

147 மெய்யென்று சொல்லுவார் சொல்லைக் கருதித் *
தொடுப்புண்டாய் வெண்ணெயையென்று *
கையைப் பிடித்துக் கரையுரலோடு என்னைக் * காணவே
கட்டிற்றிலையே **
செய்தன சொல்லிச் சிரித்து அங்கு இருக்கில் * சிரீதரா

உன் காது தூரும் *
கையில் திரியையிடுகிடாய் * இன்னின்ற காரிகையார்
சிரியாமே (9)

148 காரிகையார்க்கும் உனக்கும் இழுக்குற்றென் * காதுகள்
வீங்கியெரியில் *
தாரியாதாகில் தலை நொந்திடுமென்று * விட்டிட்டேன்
குற்றமேயன்றே **
சேரியில் பிள்ளைகள் எல்லாரும் காது பெருக்கித் * திரியவும்
காண்டி *
ஏர்விடை செற்று இளங்கன்று எறிந்திட்ட * இருடீகேசா
என்தன் கண்ணே (10)

149 கண்ணைக் குளிரக் கலந்து எங்கும் நோக்கிக் * கடிகமழ்
பூங்குழலார்கள் *
எண்ணத்துள் என்றும் இருந்து தித்திக்கும் * பெருமானே
எங்கள் அமுதே **
உண்ணக் கனிகள் தருவன் * கடிப்பொன்றும் நோவாமே
காதுக்கிடுவன் *
பண்ணைக் கிழியச் சகடம் உதைத்திட்ட * பற்பனாபா
இங்கே வாராய் (11)

150 வாவென்று சொல்லி என் கையைப் பிடித்து * வலியவே
காதில் கடிப்பை *
நோவத் திரிக்கில் உனக்கிங்கிழுக்குற்றென் * காதுகள்
நொந்திடும்கில்லேன் **
நாவற்பழம் கொண்டு வைத்தேன் * இவை காணாய் நம்பீ *
முன் வஞ்ச மகளைச்
சாவப் பாலுண்டு சகடிறப் பாய்ந்திட்ட * தாமோதரா
இங்கே வாராய் (12)

151 * வார்காது தாழப் பெருக்கி அமைத்து * மகரக் குழையிட
வேண்டி *
சீரால் அசோதை திருமாலைச் சொன்ன சொல் * சிந்தையுள்
நின்று திகழ **
பாரார்தொல் புகழான் புதுவை மன்னன் * பன்னிரு நாமத்தால்
சொன்ன *
ஆராத அந்தாதி பன்னிரண்டும் வல்லார் * அச்சுதனுக்கு
அடியாரே (13)